செ.வெ.எண்: 99/ மார்ச் /2020 நாள்: 31.03.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1224 நியாயவிலைக்கடைகள் மூலம் 7,84,587 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், முகாமில் வாழும் இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும் விடுதலின்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1000/- மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி நிவாரண உதவித்தொகை மற்றும் அத்தியாவசியப்பொருள்கள் வருகின்ற 2.4.2020 முதல் வழங்கப்படவுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்:**

--------------

கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்தை தடுக்கும் விதமாக, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளதன் காரணமாக பொதுமக்கள் பாதிப்படையாமல் இருப்பதன் பொருட்டு கொரோனா வைரஸ் நிவாரணம் 2020 பொது விநியோகத்திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/- மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 23.03.2020 அன்று நடைமுறையிலுள்ள 1224 நியாயவிலைக்கடைகளுக்கு உட்பட்ட 7,84,587 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், முகாமில் வாழும் இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும் விடுதலின்றி பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடித்து கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை வழங்கப்படும்.

கொரோனா வைரஸ் நோய்த் தாக்கத்தை தடுக்கும் விதமாக, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளதன் காரணமாக பொதுமக்கள் பாதிப்படையாமல் இருப்பதன் பொருட்டு கொரோனா வைரஸ் நிவாரணம் 2020 பொது விநியோகத்திட்டத்தின் கீழ் 02.04.2020 முதல் அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/- மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 23.03.2020 அன்று நடைமுறையிலுள்ள 1224 நியாயவிலைக்கடைகளுக்கு உட்பட்ட 784587 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், (முகாமில் உள்ள இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும்) விடுதலின்றி பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடித்து கொரோனா வைரஸ் நிவாரண உதவித்தொகை மற்றும் அத்தியாவசியப்பொருள்கள் 02.04.2020 (வியாழக்கிழமை) முதல் வழங்கப்படும்.

அனைத்து நியாயவிலை கடை விற்பனையாளர்கள் மூலம் 31.03.2020 மற்றும் 01.04.2020 ஆகிய தினங்களில் அவர்களது நியாய விலைக்கடைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு வாரியாக 300 குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகம் செய்யப்படும்.

02.04.2020, 03.04.2020 மற்றும் 04.04.2020 ஆகிய தினங்களில் ஒவ்வொரு நாளும், ஒரு மணி நேரத்திற்கு 13 கார்டுகள் வீதம் ஒரு நாளைக்கு 100 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும், அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்படும்.

02.04.2020 முதல் 04.04.2020 முடிய உள்ள நாட்களில் விடுபட்ட, வாங்க இயலாத குடும்ப அட்டைதாரர்களுக்கு 05.04.2020 முற்பகல் ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும் , அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்படும். இந்த தகவல் டோக்கன் வழங்கும் போது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

05.04.2020 பிற்பகலில் விற்பனையாளர்கள் அவர்களது நியாய விலைக்கடைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு வாரியாக மேலும் 300 குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகம் செய்யப்படும்.

06.04.2020, 07.04.2020 மற்றும் 08.04.2020 ஆகிய தினங்களில் ஒவ்வொரு நாளும், ஒரு மணி நேரத்திற்கு 13 கார்டுகள் வீதம் ஒரு நாளைக்கு 100

குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும், அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்படும்.

06.04.2020 முதல் 08.04.2020 முடிய உள்ள நாட்களில் விடுபட்ட, வாங்க இயலாத குடும்ப அட்டைதாரர்களுக்கு 09.04.2020 முற்பகல் ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும், அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்பட வேண்டும். இந்த தகவல் டோக்கன் வழங்கும் போது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

09.04.2020 பிற்பகலில் விற்பனையாளர்கள் அவர்களது நியாய விலைக்கடைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு வாரியாக மேலும் 300 குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகம் செய்யப்படும்.

10.04.2020, 11.04.2020 மற்றும் 12.04.2020 ஆகிய தினங்களில் ஒவ்வொரு நாளும், ஒரு மணி நேரத்திற்கு 13 கார்டுகள் வீதம் ஒரு நாளைக்கு 100 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும்,

அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்பட வேண்டும். இந்த தகவல் டோக்கன் வழங்கும் போது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

10.04.2020 முதல் 12.04.2020 முடிய உள்ள நாட்களில் விடுபட்ட, வாங்க இயலாத குடும்ப அட்டைதாரர்களுக்கு 13.04.2020 முற்பகல் ரூ.1000/- நிவாரண தொகையும், அவர்களுக்குரிய மேற்குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களையும், அந்தந்த நியாயவிலைக்கடைகளில் சமூக விலகலை (1 மீட்டர் இடைவெளி விட்டு) கடைபிடித்து விநியோகம் செய்யப்பட வேண்டும். இந்த தகவலினை டோக்கன் வழங்கும் போது பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும்.

13.04.2020 பிற்பகலில் விற்பனையாளர்கள் அவர்களது நியாய விலைக்கடைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரு வாரியாக மேலும் 300 குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகம் செய்யப்படும்.

இதே போன்ற நடைமுறையினை பணி நிறைவடையும் நாள் வரை கடைபிடிக்கப்படவேண்டும். டோக்கன் வழங்கும் பணி விற்பனையாளரால் மட்டுமே செய்யப்பட வேண்டும். வேறு எந்த நபரையும் உடன் வைத்திருக்க கூடாது.

மேலும்ரூ.1000/-நிவாரணத் தொகை மற்றும் விலையில்லா பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள் இதற்கான வலைதளத்தில் (www.tnpds.gov.in/tnepdsapp)மின்னனு முறையில் அல்லது செயலியில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் மார்ச் 2020 மாதத்திற்கு பொருட்கள் வாங்காத நபர்கள் ஏப்ரல் 2020-ல் தனியே நியாயவிலைக்கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பணி குறித்த புகார்கள் ஏதும் இருப்பின் அதனை சம்பந்தப்பட்ட உணவுப்பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர்கள் / வட்ட வழங்கல் அலுவலர்களிடம் புகார் தெரிவிக்கலாம். மேலும், மாவட்ட அளவில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களை (0431 -2411474, 9445045618) தொடர்பு கொண்டு புகார் அளித்து நிவாரணம் தேடிக்கொள்ளலாம் எனவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**